**செய்தி வெளியீடு எண்: 766** **நாள்: 24.10.2018**

## <u>செய்தி வெளியீடு</u>

ஹஜ் 2019–ல் ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ள விரும்பும் தமிழ் நாட்டைச் சேர்ந்த முஸ்லிம் பெருமக்களிடமிருந்து, சில விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு, மும்பை, இந்திய ஹஜ் குழு சார்பாக தமிழ் நாடு மாநில ஹஜ் குழு, ஹஜ் விண்ணப்பங்களை வரவேற்கிறது. சென்னை–34, எண்.13, மகாத்மா காந்தி சாலை (நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை)யில், ரோஸி டவர், மூன்றாம் தளத்திலுள்ள தமிழ் நாடு மாநில ஹஜ் குழுவின் செயலாளர் (ம) செயல் அலுவலரிடமிருந்து ஹஜ் 2019–ற்கான விண்ணப்பப் படிவங்களை 18.10.2018 முதல் பெற்றுக் கொள்ளலாம் அல்லது அவ்விண்ணப்பங்களை www.hajcommittee.gov.in. என்ற இணையதளம் மூலமாகவும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். விண்ணப்பப் படிவத்தை நகல்கள் எடுத்தும், உபயோகப்படுத்தலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை மனுதாரர்கள் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி 17.11.2018.

2. “வாழ்நாளில் ஒரு முறை மட்டும் இந்திய ஹஜ் குழு மூலமாக ஹஜ் பயணத்தை மேற்கொள்ளலாம்” என்னும் விதிமுறையை இந்திய ஹஜ் குழு செயற்படுத்தி வருகிறது. 17.11.2018 அன்று அல்லது அதற்கு முன்பு வழங்கப்பட்டு, குறைந்தது 31.01.2020 வரையில் செல்லக் கூடிய இயந்திரம் மூலமாக படிக்கத் தக்க (Machine readable passport) பன்னாட்டு பாஸ்போர்ட்டை விண்ணப்பதாரர்கள் வைத்திருக்க வேண்டும். IFS குறியீடு உடைய வங்கியிலுள்ள தங்களின் கணக்கு விவரங்களை மனுதாரர்கள் அளிக்க வேண்டும். ஹஜ் 2019 பற்றிய விவரங்களுக்கு ஹஜ் 2019–ற்கான வழிமுறைகளைப் படிக்கவும் அல்லது இந்திய ஹஜ் குழுவின் இணையதளம் www.hajcommittee.gov.in.–ஐ பார்வையிடுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

3. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு 17.11.2018–ற்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**